**செய்தி வெளியீடு எண்:507** **நாள்: 04.08.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.8.2017) தலைமைச் செயலகத்தில், நிதித்துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் மற்றும் திருவெறும்பூர் ஆகிய இடங்களில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சார் கருவூல அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

நிர்வாக வசதிக்காகவும், அரசுக்கு ஏற்படும் தொடர் வாடகை செலவினத்தைத் தவிர்க்கவும், தற்போது மின் ஆளுமை (e-Governance) திட்டங்களான தானியங்கி பட்டியல் ஏற்புமுறை (ATBPS) மற்றும் மின் ஓய்வூதியம் (e-Pension) போன்ற திட்டங்களை செம்மையாக செயல்படுத்திடவும், விலைமதிப்புமிக்க முத்திரைத் தாட்கள் மற்றும் சேம பாதுகாப்பு பொருட்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், ஓய்வூதியதாரர்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கவும், மாற்றுத்திறனாளிகளுக்கான தனி சாய்தளம் அமைக்கவும், வாடகை கட்டடங்களில் இயங்கும் சார்கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 6 ஆண்டுகளில் 50 சார் கருவூல அலுவலகக் கட்டடங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மேலும் 17 சார்கருவூல அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் 3148 சதுர அடி பரப்பளவில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சார் கருவூல அலுவலகக் கட்டடம் மற்றும் திருவெறும்பூரில் 3148 சதுர அடி பரப்பளவில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சார் கருவூல அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என். நடராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., கருவூல கணக்குத் துறையின் முதன்மைச் செயலாளர் / ஆணையர் திரு. தென்காசி சு. ஜவஹர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**